புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **29 ஏப்ரல், 2021**

# பத்திரிகை செய்தி

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா புதுச்சேரி அரசால் இன்று (29-04-2021) கொண்டாடப்பட்டது. ஆளுநர் மாளிகைக்கு எதிரில் உள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தி மற்றும் விளம்பரத்துறை செய்திருந்தது.

துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். பத்திரிகையாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- ”புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளில் அவரை வணங்குவதில் பெருமை கொள்கிறேன். தலைவர்களின் சிலைகள் அமைந்திருக்கும் இடத்தை சுற்றி பூச்செடிகள், மரங்கள் நட்டு அழகு படுத்துவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அது நடைமுறைப்படுத்தப்படும்.
- புதுச்சேரியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்து வருகிறது. மே 1-ஆம் தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போட மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. ஏற்கனவே ஒரு லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கிறது. மேலும், ஒரு லட்சம் தடுப்பூசி வாங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. தடுப்பூசிகள் வந்தவுடன் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்படும். இளைஞர்கள் முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும் அவர்களுக்கான தடுப்பூசிகளை அரசு வழங்கும். பொதுமக்கள் அனைவருக்கும் தேவையான தடுப்பூசிகளை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. தற்போதைய சூழலில், பொதுமக்களின் பங்களிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களுடைய பங்களிப்போடு கொரோனாவை வெல்ல முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது.
- தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்கள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மே 3ஆம் தேதி வரை கட்டுப்பாடுகள் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. அரசியல் தலைவர்களும் தொண்டர்களும் சாலையோரம் உள்ள ஏழைகளுக்கு உணவு அளித்து அதன் மூலம் தங்கள் கொண்டாட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். தேர்தல் முடிவுகள் வரும்போது கூட்டம் கூடாமல் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

- புதிதாக மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளில் இருந்து மயக்க மருந்து நிபுணர்கள் அரசுக்கு உதவி செய்ய பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இன்று மாலை ஜிப்மர் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் இயக்குனருடன் பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது. அதில் ஜிப்மர் மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரிப்பதற்கான வேண்டுகோள் வைக்கப்படும். தனியார் மருத்துவமனைகளிலும் படுக்கைகள் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. வெண்டிலேட்டர் கருவிகள் புதிதாக வாங்கப்பட்டிருக்கிறது. புதுச்சேரி யில் உள்ள மக்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- ரெம்டெசிவிர் மருந்தை பயன்படுத்த ஒரு வழிமுறை இருக்கிறது. மருத்துவத் துறையை சேர்ந்தவர் என்பதால் நான் சொல்கிறேன். ரெம்டெசிவிர் போட்டால்தான் நோய் குணமாகும் என்ற எண்ணம் சரியானதல்ல. அந்த மாயையை ஏற்படுத்தக் கூடாது. ரெம்டெசிவிர் மருந்திற்காக மக்கள் அவதிப்படுவதை பார்த்து நான் வருத்தப்படுகிறேன். இந்திய மருத்துவ கழகம் ஒரு வழிகாட்டுதலை அறிவிக்க வேண்டும் என்று ஏற்கனவே கேட்டுக் கொண்டேன். பிராணவாயு செலுத்துதல், ஸ்டீராய்டுகள் பிற அவசரகால மருந்துகள் மூலமாக நோயாளிகளைக் காப்பாற்ற முடியும். மருத்துவர்களும் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும். மக்களை பரிதவிப்பில் விடக்கூடாது. தமிழக அரசு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறது. நான் பாராட்டுகிறேன்.
- புதுச்சேரியில் ரெம்டெசிவிர் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக ஹைதராபாத்தில் இருந்து நானே ஆயிரம் குப்பிகள் வங்கி வந்தேன். தற்போது 1000 ரெம்டெசிவிர் மருந்து கையிருப்பில் இருக்கிறது. புதுச்சேரியில் ரெம்டெசிவிர் மருந்து தேவைப்படும் அனைவருக்கும் அரசு வழங்கி வருகிறது. அண்மையில் கூட ஜிப்மர் மருத்துவமனைக்கு ரெம்டெசிவிர் மருந்து வழங்கப்பட்டது. தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து மருந்துகளையும் அரசு வழங்கி வருகிறது." என்று தெரிவித்தார்.